பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை / 13

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 22

மூல நூலாசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 27

1 அறியாமைக் கால வழக்கங்கள்[1] / 53

2 இணைவைப்பு, பிரிவினை, கலகம் / 57

மூடவழக்கம் - 1: நல்லடியார்களிடம் பிரார்த்தனை செய்தார்கள் / 57

மூடவழக்கம் - 2: மார்க்கத்தில் பிரிவுகளை உருவாக்கினார்கள் / 63

மூடவழக்கம் - 3: ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்பட மறுத்தார்கள் / 65

3 சத்தியத்தை மறுக்க வெற்றுக் காரணங்கள் / 70

மூடவழக்கம் - 4: கண்மூடித்தனமாகப் பின்பற்றினார்கள் / 70

மூடவழக்கம் - 5: பெரும்பான்மையை ஆதாரமாக நம்பினார்கள் / 72

மூடவழக்கம் - 6: மூதாதையர்களை ஆதாரமாக நம்பினார்கள் / 77

மூடவழக்கம் - 7: செல்வாக்குள்ளவர்களை ஆதாரமாக நம்பினார்கள் / 80

மூடவழக்கம் - 8: பலவீனர்களின் ஆதரவை அசத்தியமாகக் கருதினார்கள் / 83

மூடவழக்கம் - 9: பாவி அறிஞனையும் மூட வணக்கசாலியையும் பின்பற்றினார்கள் / 84

மூடவழக்கம் - 10: பாமரர்களின் ஆதரவை அசத்தியமாகக் கருதினார்கள் / 85

4 அசத்தியப் பிடிமானங்கள் / 88
மூடவழக்கம் - 11: பொய் ஒப்பீடு செய்தார்கள் / 88
மூடவழக்கம் - 12: முறையான ஆய்வை நிராகரித்தார்கள் / 89
மூடவழக்கம் - 13: அறிஞர்கள், நல்லோர்கள் விசயத்தில் வரம்புமீறினார்கள் / 90
மூடவழக்கம் - 14: மாறுசெய்வதே கொள்கையாகக் கொண்டிருந்தார்கள் / 91
மூடவழக்கம் - 15: புரியவில்லை என்று தட்டிக்கழித்தார்கள் / 93
5 இறைத்தூதர்களை மறுப்பதும் சூனியத்தை நம்புவதும் / 96
மூடவழக்கம் - 16: சூனியத்தைக் கற்றுப் பின்பற்றினார்கள் / 96
மூடவழக்கம் - 17: அசத்தியத்தை இறைத்தூதர்கள்மீது ஏற்றிக்கூறினார்கள் / 98
மூடவழக்கம் - 18: நபியின் வமிசமெனக் கூறிக்கொண்டே நபிக்கு மாறுசெய்தார்கள் / 99
மூடவழக்கம் - 19: நபியின் கூட்டத்தாரை ஏசி நபியையும் ஏசினார்கள் / 99
மூடவழக்கம் - 20: சூனியத்தை நல்லோர்களின் அற்புதமாக நம்பினார்கள் / 100
6 கேளிக்கையே மார்க்கமாக / 103
மூடவழக்கம் - 21: கேளிக்கைகளை வழிபாடாக்கினார்கள் / 103
மூடவழக்கம் - 22: மார்க்கத்தைக் கேலிக்கூத்தாக்கினார்கள் / 103
மூடவழக்கம் - 23: உலக இன்பங்களை இறைதிருப்தி என நம்பினார்கள் / 104
7 சத்தியத்தை மறுக்க பலவீனர்களைக் கைகாட்டுதல் / 106
மூடவழக்கம் - 24: பலவீனர்களை வெறுத்து சத்தியத்தைப் புறக்கணித்தார்கள் / 106
மூடவழக்கம் - 25: பலவீனர்கள் ஏற்றதென்றால் அது அசத்தியமே என்றார்கள் / 107
8 வேத மோசடிகள் / 109
மூடவழக்கம் - 26: வேதத்தை விளங்கிக்கொண்டே திரித்தார்கள் / 109
மூடவழக்கம் - 27: பொய்களை இறைவேதம் என்று ஏமாற்றினார்கள் / 110

9 அசத்திய இயக்கவாதிகள் / 112
மூடவழக்கம் - 28: இயக்க வெறி கொண்டிருந்தார்கள் / 112
மூடவழக்கம் - 29: போலி இயக்கவாதிகளாக இருந்தார்கள் / 113
மூடவழக்கம் - 30: அசத்தியக் கூட்டமாக இருந்துகொண்டு அதைக் கொண்டாடினார்கள் / 114
10 நிராகரிப்பில் நேசம் / 115
மூடவழக்கம் - 31: இறைநிராகரிப்பாளர்களின் கொள்கைகளை நேசித்தார்கள் / 115
மூடவழக்கம் - 32: பிடிக்காதவர்களின் சொல்லை அசத்தியம் என்றார்கள் / 116
மூடவழக்கம் - 33: தாங்கள் ஏற்பதையும் அவர்களே நிராகரித்தார்கள் / 116
11 நரகப் பாதையில் சொர்க்க ஆசை / 118
மூடவழக்கம் - 34: தங்களைத் தாங்களே சொர்க்கவாசிகளாகச் சொன்னார்கள் / 118
மூடவழக்கம் - 35: மர்ம உறுப்புகளைக் காட்டியபடி வணங்கினார்கள் / 119
மூடவழக்கம் - 36: அனுமதிக்கப்பட்டதைத் தடுத்துக்கொண்டு வணங்கினார்கள் / 119
மூடவழக்கம் - 37: மதகுருக்களை வணங்கினார்கள் / 120
12 நாத்திகப் பயணம் / 122
மூடவழக்கம் - 38: அல்லாஹ்வின் பண்புகளை மறுத்தார்கள் / 122
மூடவழக்கம் - 39: அல்லாஹ்வின் பெயர்களை மறுத்தார்கள் / 122
மூடவழக்கம் - 40: தத்துவம் பேசி நாத்திகம் பேசினார்கள் / 124
மூடவழக்கம் - 41: அல்லாஹ்வுக்குக் குறைகளைக் கற்பித்தார்கள் / 126
மூடவழக்கம் - 42: அல்லாஹ்வின் அதிகாரத்தில் இணைகளைக் கற்பித்தார்கள் / 130

13 விதியை மறுக்கும் விதிகள் / 132
மூடவழக்கம் - 43: விதியை மறுத்தார்கள் / 132
மூடவழக்கம் - 44: விதியைக் காட்டி பாவத்தை நியாயப்படுத்தினார்கள் / 134
மூடவழக்கம் - 45: மார்க்கத்திற்கு மாறுசெய்ய விதியைக் காரணம் சொன்னார்கள் / 135
14 நன்றி கெட்டத்தனம் / 138
மூடவழக்கம் - 46: காலத்தைத் திட்டினார்கள் / 138
மூடவழக்கம் - 47: அல்லாஹ்வின் அருளை மற்றவர்களுடன் இணைத்தார்கள் / 139
மூடவழக்கம் - 48: அல்லாஹ்வின் அத்தாட்சிகளை மறுத்தார்கள் / 140
மூடவழக்கம் - 49: அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் சிலவற்றை மறுத்தார்கள் / 142
மூடவழக்கம் - 50: அல்லாஹ்வை மதிக்க வேண்டிய முறையில் மதிக்கவில்லை / 143
15 ஞானத்தைக் குறைகூறும் ஊனம் / 144
மூடவழக்கம் - 51: குர்ஆனை மனித வார்த்தை என்றார்கள் / 144
மூடவழக்கம் - 52: அல்லாஹ்வின் ஞானத்தைக் குறை கூறினார்கள் / 144
16 சத்தியத்திற்கெதிரான சதிகள் / 146
மூடவழக்கம் - 53: இறைத்தூதுச் செய்தியை முடக்க தந்திரங்கள் செய்தார்கள் / 146
மூடவழக்கம் - 54: சத்தியத்தை ஏற்பதுபோல் நடித்தார்கள் / 147
மூடவழக்கம் - 55: மத்ஹபு பிடிவாதம் கொண்டார்கள் / 147
மூடவழக்கம் - 56: இஸ்லாமையும் இணைவைப்பு என்றார்கள் / 147
மூடவழக்கம் - 57: வேத வார்த்தைகளைத் திரித்துப் பொருள் சொன்னார்கள் / 149
மூடவழக்கம் - 58: வேதத்தைத் திரித்து ஓதினார்கள் / 149
மூடவழக்கம் - 59: நேர்வழியில் இருப்போருக்குத் தீய பட்டங்களைச் சூட்டினார்கள் / 150
மூடவழக்கம் - 60: அல்லாஹ்வின்மீது இட்டுக்கட்டினார்கள் / 151

17 அசத்தியத் திமிர் / 152
மூடவழக்கம் - 61: சத்தியத்தைப் பொய்ப்பித்தார்கள் / 152
மூடவழக்கம் - 62: சத்தியத்தை நிலைநாட்டினால் அதிகார வர்க்கத்தை ஏவிவிட்டார்கள் / 152
மூடவழக்கம் - 63: இறைத்தூதர்களை வசைபாடினார்கள் / 153
மூடவழக்கம் - 64: இறைத்தூதர்கள்மீது அதிகார வர்க்கத்திடம் பொய்ப் புகாரளித்தார்கள் / 153
மூடவழக்கம் - 65: ஆட்சியாளரின் மதத்தை இறைத்தூதர்கள் இழிவுபடுத்துவதாகப் பரப்பினார்கள் / 154
மூடவழக்கம் - 66: மதம் மாற்றுவதாக இறைத்தூதர்களைக் குற்றம் சாட்டினார்கள் / 154
மூடவழக்கம் - 67: ஆட்சியாளரை இழிவுபடுத்துவதாக இறைத்தூதர்கள்மீது பொய்யைப் புனைந்தார்கள் / 154
மூடவழக்கம் - 68: சத்தியத்தைச் செயல்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டே புறக்கணித்தார்கள் / 155
18 போலி மார்க்கம் / 156
மூடவழக்கம் - 69: மார்க்கத்தில் புதுமைகளை நுழைத்தார்கள் / 156
மூடவழக்கம் - 70: மார்க்கத்தில் உள்ளதைத் தள்ளினார்கள் / 156
மூடவழக்கம் - 71: பேணுதல் பெயரில் கடமைகளையே விட்டார்கள் / 158
19 போலி வணக்கங்கள் / 160
மூடவழக்கம் - 72: அல்லாஹ் வழங்கியதை மறுப்பதை வணக்கமாக நம்பினார்கள் / 160
மூடவழக்கம் - 73: அலங்காரத்தைத் தவிர்ப்பதை வணக்கமாக நம்பினார்கள் / 160
20 மூடப் பிரச்சாரங்கள் / 162
மூடவழக்கம் - 74: கல்வியின்றி அழைப்புப்பணி செய்தார்கள் / 162
மூடவழக்கம் - 75: அறிந்தே இறைமறுப்பின்பால் அழைத்தார்கள் / 163

21 தீய சக்திகள் / 164
மூடவழக்கம் - 76: இறைத்தூதர்களுக்கு எதிராகச் சதி செய்தார்கள் / 164
மூடவழக்கம் - 77: பாவியையும் மூடனையும் தலைவனாக்கினார்கள் / 165
மூடவழக்கம் - 78: தாங்கள்தாம் இறைநேசர்கள் என்றார்கள் / 166
மூடவழக்கம் - 79: அல்லாஹ்வின் சட்டங்களை மறுத்துக்கொண்டே அவனை நேசிப்பதாகச் சொன்னார்கள் / 167
மூடவழக்கம் - 80: கற்பனை ஆசைகள் கொண்டிருந்தார்கள் / 167
22 சமாதிகளில் இணைவைப்பு / 169
மூடவழக்கம் - 81: நல்லோர்களின் சமாதிகளைப் பூஜித்தார்கள் / 169
மூடவழக்கம் - 82: நபிமார்களின் வாழ்விடங்களைப் பூஜித்தார்கள் / 170
மூடவழக்கம் - 83: சமாதிகள்மீது விளக்கேற்றினார்கள் / 172
மூடவழக்கம் - 84: சமாதிகளில் திருவிழா கொண்டாடினார்கள் / 172
மூடவழக்கம் - 85: சமாதிகளில் பலியிட்டார்கள் / 173
மூடவழக்கம் - 86: தலைவர்களின் வாழ்விடங்களில் பரக்கத் தேடினார்கள் / 173
23 மூதாதையர் வழிபாடு / 175
மூடவழக்கம் - 87: கோத்திரப் பெருமை பேசினார்கள் / 175
மூடவழக்கம் - 88: வமிசத்தைக் குறை பேசினார்கள் / 176
மூடவழக்கம் - 89: நட்சத்திரங்களை வணங்கினார்கள் / 176
மூடவழக்கம் - 90: ஒப்பாரி வைத்தார்கள் / 178
24 இன வெறி / 180
மூடவழக்கம் - 91: கலவரம் செய்தார்கள் / 180
மூடவழக்கம் - 92: பெருமையடிப்பதைப் பெருமையாக நினைத்தார்கள் / 181
மூடவழக்கம் - 93: தன் கட்சிக்காரன் என்றால் அசத்தியத்தையும் ஆதரித்தார்கள் / 182

மூடவழக்கம் - 94: பாவங்களை மற்றவர்மீது சுமத்தினார்கள் / 183
மூடவழக்கம் - 95: பாவம் செய்யாதவர்மீதும் அப்பாவத்தைச் சுமத்தினார்கள் / 183

25 பெருமையடித்தல் / 185
மூடவழக்கம் - 96: மஸ்ஜிது நிர்வாகத்தில் பெருமையடித்தார்கள் / 185
மூடவழக்கம் - 97: நபிமார்களின் வாரிசுகளாகப் பெருமையடித்தார்கள் / 186
மூடவழக்கம் - 98: தொழிலை வைத்து பெருமையடித்தார்கள் / 187
மூடவழக்கம் - 99: உலக வாழ்க்கையை மகிமைப்படுத்தினார்கள் / 187
மூடவழக்கம் - 100: அல்லாஹ்வின் தீர்ப்பை ஆட்சேபித்தார்கள் / 188
மூடவழக்கம் - 101: ஏழைகளை ஏளனம் செய்தார்கள் / 188
மூடவழக்கம் - 102: இறைத்தூதர்களைப் பின்பற்றுவோரின் நோக்கத்தை இழிவுபடுத்தினார்கள் / 188

26 நம்பிக்கைகளைப் பொய்ப்பித்தல் / 190
மூடவழக்கம் - 103: வானவர்களை மறுத்தார்கள் / 190
மூடவழக்கம் - 104: இறைத்தூதர்களை மறுத்தார்கள் / 190
மூடவழக்கம் - 105: வேதங்களை மறுத்தார்கள் / 191
மூடவழக்கம் - 106: அல்லாஹ்வின் இறைச்செய்தியைத் துச்சமாகப் புறக்கணித்தார்கள் / 191
மூடவழக்கம் - 107: இறுதிநாளை மறுத்தார்கள் / 192
மூடவழக்கம் - 108: அல்லாஹ்வின் சந்திப்பைப் பொய்யாக்கினார்கள் / 193
மூடவழக்கம் - 109: இறைத்தூதர்களின் சொல்லைப் பொய்யாக்கினார்கள் / 193

27 அழிச்சாட்டியங்கள் / 195
மூடவழக்கம் - 110: நீதியாளர்களைக் கொன்றார்கள் / 195
மூடவழக்கம் - 111: ஷைத்தான்கள்மீது விசுவாசம் கொண்டார்கள் / 196

மூடவழக்கம் - 112: இணைவைப்பாளர்களின் மதத்தை மேன்மைப்படுத்தினார்கள் / 196
மூடவழக்கம் - 113: சத்தியத்தையும் அசத்தியத்தையும் கலந்து குழப்பினார்கள் / 197
மூடவழக்கம் - 114: சத்தியத்தை மறைத்தார்கள் / 197
மூடவழக்கம் - 115: அறிவின்றி அல்லாஹ்வைப்பற்றிப் பேசினார்கள் / 197
மூடவழக்கம் - 116: சத்தியத்தை மறுத்து முரண்பட்டார்கள் / 199
மூடவழக்கம் - 117: இறைச்செய்தியில் விரும்பியதை ஏற்பதும் நிராகரிப்பதுமாக இருந்தார்கள் / 199
மூடவழக்கம் - 118: இறைத்தூதர்களை ஏற்பதில் பாகுபாடு காட்டினார்கள் / 200
மூடவழக்கம் - 119: அறிவின்றி தர்க்கம் செய்தார்கள் / 201
மூடவழக்கம் - 120: முன்னோர்களைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொண்டே அவர்களுக்கு மாறுசெய்வார்கள் / 201
மூடவழக்கம் - 121: அல்லாஹ்வின் பாதையில் வாழவிடாமல் தடுத்தார்கள் / 202
மூடவழக்கம் - 122: இறைநிராகரிப்பையும் நிராகரிப்பாளர்களையும் நேசித்தார்கள் / 203

28 சகுனம், சோதிடம், மூடநம்பிக்கைகள் / 206
மூடவழக்கம் - 123: பறவை சகுனம் பார்த்தார்கள் / 206
மூடவழக்கம் - 124: குறி சொல்வதை நம்பினார்கள் / 206
மூடவழக்கம் - 125: கிளி சோதிடம் நம்பினார்கள் / 207
மூடவழக்கம் - 126: சோதிடத்தை நம்பினார்கள் / 207
மூடவழக்கம் - 127: ஷைத்தானிய தீர்ப்பை விரும்பினார்கள் / 208
மூடவழக்கம் - 128: திருமணத்தின் பெயரில் மூடநம்பிக்கைகள் கொண்டிருந்தார்கள் / 209

2

இணைவைப்பு, பிரிவினை, கலகம்

❀

மூடவழக்கம் – 1

நல்லடியார்களிடம் பிரார்த்தனை செய்தார்கள்

أَنَّهُمْ يَتَعَبَّدُونَ بِإِشْرَاكِ الصَّالِحِيْنَ فِي دُعَاءِ اللهِ وَعِبَادَتِهِ يُرِيْدُونَ شَفَاعَتَهُمْ عِنْدَ اللهِ لِظَنِّهِم أَنَّ اللهَ يُحِبُّ ذَلِكَ، وَأَنَّ الصَّالِحِينَ يُجِيبُونَهُ كما قالَ تعالَى: {وَيَعْبُدُونَ مِنْ دُونِ اللَّهِ مَا لا يَضُرُّهُمْ وَلا يَنْفَعُهُمْ وَيَقُولُونَ هَؤُلاءِ شُفَعَاؤُنَا عِنْدَ اللَّهِ} (يونس: ١٨). {وَالَّذِينَ اتَّخَذُوا مِنْ دُونِهِ أَوْلِيَاءَ مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَا إِلَى اللَّهِ زُلْفَى} (الزمر: ٣). وَهَذِهِ أَعْظَمُ مَسْأَلَةٍ خَالَفَهُمْ فِيهَا رَسُولُ اللهِ صلى الله عليه وسلم، فَأَتَى بالإِخْلاَصِ، وَأَخْبَرَ أَنَّهُ دِينُ اللهِ، الذِي أَرْسَلَ بِهِ جَمِيعَ الرُّسُلِ، وَأَنَّهُ لا يُقْبَلُ مِنَ الأَعْمَالِ إِلاَّ الخَالِصُ، وَأَخْبَرَ أَنَّ مَنْ فَعَلَ مَا اسْتَحْسَنُوا فَقَدْ حَرَّمَ اللهُ عليه الجَنَّةَ، وَمَأْواه النَّارُ، وَهَذِهِ هِيَ المسأَلَةُ الَّتِي تَفَرَّقَ النَّاسُ مِنْ أَجْلِها بَيْنَ مُؤْمِنٍ وَكَافِرٍ، وَعِنْدَهَا وَقَعَتِ العَدَاوَةُ، وَلِأَجْلِهَا شُرِعَ الجِهَادُ، كَمَا قَالَ تَعالى: {وَقَاتِلُوهُمْ حَتَّى لا تَكُونَ فِتْنَةٌ وَيَكُونَ الدِّينُ كُلُّهُ لِلَّه} (الأنفال: ٣٩)

அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கின்றபோதும், அவனை வணங்குகின்றபோதும் அந்த வணக்கவழிபாடுகளில் நல்லோர்களையும் கூட்டாக்கி வணங்கினார்கள். அவர்களின் நோக்கம் அந்த நல்லோர்கள் தங்கள் சார்பாக அல்லாஹ்விடம் பரிந்துரை செய்து பேசுவார்கள் என்பதாக இருந்தது. இவ்விசயத்தில் அவர்களின் எண்ணம், 'அல்லாஹ் இதை விரும்புகிறான்; நல்லோர்களும் இதை விரும்புகிறார்கள்' என்பதாக இருந்தது.[1]

3

சத்தியத்தை மறுக்க வெற்றுக் காரணங்கள்

❀

மூடவழக்கம் – 4

கண்மூடித்தனமாகப் பின்பற்றினார்கள்

أَنَّ دِيْنَهُمْ مَبْنِيٌّ عَلَى أُصُوْلٍ: أَعْظَمُهَا التَّقْلِيْدُ، فَهُوَ القَاعِدَةُ الكُبْرَى لِجَمِيْعِ الكُفَّارِ اَوَّلِهِمْ وَآخِرِهِمْ

அவர்களின் மார்க்கம் சில அடிப்படைகளின்மீது கட்டப் பட்டிருந்தது. அவற்றில் மிகவும் முக்கியத்துவம் பெற்று முதன்மை வகித்த விசயம் தக்லீது எனும் கண்மூடித்தனமானப் பின்பற்றுதல் ஆகும். அவர்களில் ஆரம்பம் முதல் இறுதி வரையுள்ள எல்லாக் காஃபிர்களுக்கும் அவர்களுடைய அடிப் படைக்கொள்கைகள் அனைத்துக்கும் மிகப் பெரிய ஆணி வேராக இருந்த கொள்கை இந்தத் தக்லீதுதான். அல்லாஹ் இதுகுறித்து கூறுகின்றான்:

وَكَذَلِكَ مَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ فِي قَرْيَةٍ مِنْ نَذِيرٍ إِلَّا قَالَ مُتْرَفُوهَا إِنَّا وَجَدْنَا آبَاءَنَا عَلَى أُمَّةٍ وَإِنَّا عَلَى آثَارِهِمْ مُقْتَدُونَ

இவ்வாறே உங்களுக்கு முன்னரும் நாம் நம்முடைய தூதரை எந்த ஊராரிடம் அனுப்பி வைத்தோமோ, அங்குள்ள தலைவர்களும், 'நாங்கள் எங்கள் முன்னோர்களை ஒரு வழியில் கண்டோம்; அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே செல்வோம்' என்று கூறாமல் இருக்கவில்லை. *(குர்ஆன் 43:23)*

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

وَإِذَا قِيلَ لَهُمُ اتَّبِعُوا مَا أَنْزَلَ اللَّهُ قَالُوا بَلْ نَتَّبِعُ مَا وَجَدْنَا عَلَيْهِ آبَاءَنَا أَوَلَوْ كَانَ الشَّيْطَانُ يَدْعُوهُمْ إِلَى عَذَابِ السَّعِيرِ

மூடவழக்கம் – 8

பலவீனர்களின் ஆதரவை அசத்தியமாகக் கருதினார்கள்

الْاِسْتِدْلَالُ عَلَى بُطْلَانِ الشَّيْءِ بِأَنَّهُ لَمْ يَتَّبِعْهُ إِلاَّ الضُّعَفَاءُ

அசத்தியமானது என ஒன்றைத் தீர்மானிப்பதற்கு அதைப் பின்பற்றி நடப்பவர்கள் பலவீனமான மக்களாக இருப்பார்கள் என்று நம்பினார்கள். அசத்தியத்திற்கு ஆதாரமாக இதைச் சார்ந்திருந்தார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

قَالُوا أَنُؤْمِنُ لَكَ وَاتَّبَعَكَ الْأَرْذَلُونَ

அதற்கவர்கள், 'உம்மை நாங்கள் நம்பிக்கைகொள்வதா? (எங்களிடம் கூலி வேலை செய்கின்ற) மிகத் தாழ்ந்தவர்கள் தாம் உம்மைப் பின்பற்றியிருக்கின்றார்கள்' என்று கூறினார்கள்.[1] (குர்ஆன் 26:111)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

أَهَؤُلَاءِ مَنَّ اللَّهُ عَلَيْهِمْ مِنْ بَيْنِنَا

நமக்கிடையில் (ஏழைகளாகிய) இவர்கள்மீதா அல்லாஹ் அருள்புரிந்துவிட்டான்? (குர்ஆன் 6:53)

இப்படி ஆதாரம் கூறுவதை அல்லாஹ் மறுக்கவும் செய்கிறான்.

أَلَيْسَ اللَّهُ بِأَعْلَمَ بِالشَّاكِرِينَ

நன்றி செலுத்துபவர்களை அல்லாஹ் மிக அறிந்தவனில்லையா? (குர்ஆன் 6:53)

பின்குறிப்பு

1. இது நபி நூஹ் ﷺ அவர்களுடைய மக்கள் முன்வைத்த வாதமாகும். இதற்கு நூஹ் அளித்த பதிலை அல்லாஹ் அடுத்த வசனத்தில் கூறுகின்றான்:

قَالَ وَمَا عِلْمِي بِمَا كَانُوا يَعْمَلُونَ

அதற்கு அவர், 'நான் அவர்கள் செய்துகொண்டிருக்கிற வேலை இன்னதென அறியமாட்டேன். (அதனை விசாரிப்பதும் என் வேலையில்லை)' என்றார். (குர்ஆன் 26:112)

என்றார்கள். அப்படி வந்தால் ஏற்றுக்கொள்வோம் என்றார்கள். இது அவர்களின் மூடத்தனத்தைக் காட்டுகிறது. முறையான ஆய்வின்படியான ஒப்பிடுதலை அவர்கள் நிராகரித்ததை உணர்த்துகின்றது.

மூடவழக்கம் – 13

அறிஞர்கள், நல்லோர்கள் விசயத்தில் வரம்புமீறினார்கள்

الْغُلُوُّ فِي الْعُلَمَاءِ وَالصَّالِحِيْنَ

தங்களின் அறிஞர்கள், நல்லோர்கள் விசயத்தில் அவர்கள் வரம்புமீறிச் செயல்பட்டார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

يَا أَهْلَ الْكِتَابِ لَا تَغْلُوا فِي دِينِكُمْ وَلَا تَقُولُوا عَلَى اللَّهِ إِلَّا الْحَقَّ

வேதத்தையுடையோரே! நீங்கள் உங்கள் மார்க்கத்தில் அளவு கடந்து செல்லாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றி உண்மையைத் தவிர வேறெதையும் கூறாதீர்கள். (குர்ஆன் 4:171)[1]

பின்குறிப்பு

1. அல்லாஹ் மேலும் கூறுகின்றான்:

قُلْ يَاأَهْلَ الْكِتَابِ لَا تَغْلُوا فِي دِينِكُمْ غَيْرَ الْحَقِّ وَلَا تَتَّبِعُوا أَهْوَاءَ قَوْمٍ قَدْ ضَلُّوا مِنْ قَبْلُ وَأَضَلُّوا كَثِيرًا وَضَلُّوا عَنْ سَوَاءِ السَّبِيلِ

'வேதமுடைய (யூதர்களே, கிறித்து)வர்களே! நீங்கள் உங்கள் மதத்தில் (எதையும்) மிகைப்படக் கூறி வரம்புமீறாதீர்கள். மேலும், இதற்கு முன்னர் (இவ்வாறு) வழிதவறிய மக்களின் விருப்பங்களையும் நீங்கள் பின்பற்றாதீர்கள். (ஏனென்றால்) அவர்கள் நேரான வழியிலிருந்து தவறிவிட்டதுடன் (மற்றும்) பலரை வழிகெடுத்தும் இருக்கின்றார்கள்' என்றும் (நபியே!) நீர் கூறுவீராக! (குர்ஆன் 5:77)

هَلَكَ الْمُتَنَطِّعُونَ قَالَهَا ثَلَاثًا

வரம்பு மீறியவர்கள் அழிந்தார்கள் என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் மூன்று முறை கூறினார்கள். (அறிவிப்பு: இப்னு மஸ்ஊது ﷺ, முஸ்லிம் 2670)

6

கேளிக்கையே மார்க்கமாக

❀

மூடவழக்கம் – 21

கேளிக்கைகளை வழிபாடாக்கினார்கள்

تَعَبُّدُهُمْ بِالْمُكَاءِ وَالتَّصْدِيَةِ

சீட்டி அடிப்பதும், கை தட்டுவதுமாகவே அவர்கள் வணக்க வழிபாடுகளைச் செய்தார்கள்.[1]

பின்குறிப்பு

1. அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا كَانَ صَلَاتُهُمْ عِنْدَ الْبَيْتِ إِلَّا مُكَاءً وَتَصْدِيَةً

அப்பள்ளியில் அவர்களுடைய தொழுகையெல்லாம் சீட்டியடிப்பதும், கை தட்டுவதுமே தவிர வேறில்லை. *(8:35)*

ஆக, இறைநிராகரிப்பாளர்கள் தங்களின் மதத்தையே ஒரு கேளிக்கை விளையாட்டாக ஆக்கிக்கொண்டார்கள் என்பது இதன் மூலம் உறுதியாகின்றது.

மூடவழக்கம் – 22

மார்க்கத்தைக் கேலிக்கூத்தாக்கினார்கள்

أَنَّهُمُ اتَّخَذُوا دِيْنَهُمْ لَهْواً وَلَعِباً

தங்களுடைய மார்க்கத்தை வீணாகவும் விளையாட்டாகவும் எடுத்துக்கொண்டார்கள்.[1]

7

சத்தியத்தை மறுக்க பலவீனர்களைக் கைகாட்டுதல்

❀

மூடவழக்கம் – 24

பலவீனர்களை வெறுத்து சத்தியத்தைப் புறக்கணித்தார்கள்

تَرْكُ الدُّخُولِ فِي الحَقِّ إِذَا سَبَقَهُمْ إِلَيْهِ الضُّعَفَاءُ تَكَبُّراً وَأَنَفَةً

பலவீனர்களும் ஏழைகளும் அவர்களுக்கு முன்பே சத்தியத்தை ஏற்றுக்கொண்டு அவர்களை முந்திக்கொண்டு தழுவிவிட்டதால், தாங்கள் சத்தியத்தை ஏற்காமல் ஆணவத்தையும் பிடிவாதத்தையும் வெளிப்படுத்தி அதைப் புறக்கணித்தார்கள். அல்லாஹ் இதுகுறித்துப் பின்வருமாறு கூறுகிறான்:

وَلَا تَطْرُدِ الَّذِينَ يَدْعُونَ رَبَّهُمْ بِالْغَدَاةِ وَالْعَشِيِّ يُرِيدُونَ وَجْهَهُ مَا عَلَيْكَ مِنْ حِسَابِهِمْ مِنْ شَيْءٍ وَمَا مِنْ حِسَابِكَ عَلَيْهِمْ مِنْ شَيْءٍ فَتَطْرُدَهُمْ فَتَكُونَ مِنَ الظَّالِمِينَ

(நபியே!) தங்கள் இறைவனின் முகத்தை நாடி காலையிலும் மாலையிலும் பிரார்த்தனை செய்துகொண்டிருப்பவர்களை நீர் விரட்டிவிடாதீர்! அவர்களுடைய கணக்கிலிருந்து எதுவும் உம்முடைய பொறுப்பாகாது. உம்முடைய கணக்கிலிருந்து எதுவும் அவர்களுடைய பொறுப்பாகாது. ஆகவே, நீர் அவர்களை விரட்டினால் அநியாயக்காரர்களில் நீரும் ஒருவராகிவிடுவீர்.[1] *(குர்ஆன் 6:52)*

பின்குறிப்பு

1. இந்த வசனத்தை அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:
وَكَذَلِكَ فَتَنَّا بَعْضَهُمْ بِبَعْضٍ لِيَقُولُوا أَهَؤُلَاءِ مَنَّ اللَّهُ عَلَيْهِمْ مِنْ بَيْنِنَا أَلَيْسَ اللَّهُ بِأَعْلَمَ بِالشَّاكِرِينَ

9

அசத்திய இயக்கவாதிகள்

❀

மூடவழக்கம் – 28

இயக்க வெறி கொண்டிருந்தார்கள்

أَنَّهُمْ لاَ يَقْبَلُونَ مِنَ الحَقِّ إِلاَّ الَّذِي مَعَ طَائِفَتِهِمْ

தங்களது கூட்டத்தினரைத் தவிர வேறு எவரிடமிருந்தும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

وَإِذَا قِيلَ لَهُمْ آمِنُوا بِمَا أَنْزَلَ اللَّهُ قَالُوا نُؤْمِنُ بِمَا أُنْزِلَ عَلَيْنَا وَيَكْفُرُونَ بِمَا وَرَاءَهُ

'அல்லாஹ் இறக்கிவைத்த (இ)தை நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள்' என அவர்களுக்குக் கூறப்பட்டால், 'எங்கள் (தூதர்கள்)மீது இறக்கப்பட்டவையை (மட்டுமே) நம்பிக் கைகொள்வோம்' எனக் கூறி அவற்றைத் தவிர உள்ள இ(ந்த(க்குர்ஆ)னை நிராகரித்துவிடுகின்றார்கள். (குர்ஆன் 2:91)[1]

பின்குறிப்பு

1. யூதர்கள் மற்றும் அவர்களைப் போன்றவர்களின் பண்பு களில் ஒன்று, தாங்கள் விரும்பியதை மட்டுமே சத்தியம் என்று ஏற்றுக்கொள்வதாகும். தங்கள் மனஇச்சைக்கு எதி ராக மார்க்கம் ஒன்றைச் சொன்னால் அதை எதிர்ப்பதாகும். இதே அடிப்படையில்தான் தாங்கள் சரிகாணும் மனிதர் களின் சொல்லை மட்டும் சத்தியம் என்று நம்புவதாகும். தங்களுக்குப் பிடிக்காதவர்கள்மீது அவதூறு சொல்வதும், இதில் உச்சமாக அவர்களைக் கொலை செய்வதுமாகும். யூதர்களைப் பற்றி அல்லாஹ் சொல்கிறான்:

10

நிராகரிப்பில் நேசம்

❀

மூடவழக்கம் – 31

இறைநிராகரிப்பாளர்களின் கொள்கைகளை நேசித்தார்கள்

وَهِيَ مِـنْ أَعْجَبِ الْآيَاتِ -أَيْضـاً- مُعَادَاتُهُم الدِّينَ الَّذِي انْتَسَـبُوا إِلَيْهِ غَايَةَ الْعَدَاوَةِ وَمَحَبَّتُهُمْ دِينَ الكُفَّارِ الَّذِينَ عَادُوهُمْ وَعَادُوا نَبِيَّهُمْ وَفِئَتَهُمْ غَايَةَ المَحَبَّةِ، كَمَا فَعَلُوا مَعَ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ لَمَّا أَتَاهُمْ بِدِينِ مُوسَى عَلَيْهِ السَّلَامُ، وَاتَّبَعُوا كُتبَ السِّحرِ وَهِيَ مِنْ دِينِ آلِ فِرعونَ

அல்லாஹ்வின் ஆச்சரியமான அத்தாட்சிகளில் இதுவும் உள்ளதுதான். அதாவது, எந்த மார்க்கத்தைத் தங்களுடையதாகக் கூறிக்கொள்கிறார்களோ அதன்மீது இவர்கள் கடும் விரோதம்கொள்கிறார்கள். அதே சமயம், தங்களின் எதிரிகளாகவும் தங்கள் நபியின் எதிரியாகவும் இருக்கின்ற இறைநிராகரிப்பாளர்களின் மார்க்கத்தை நேசிக்கிறார்கள். அவர்களது நேசத்தின் அளவுக்கேற்ப சோதிக்கப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, நபி மூஸா ﷺ அவர்களின் மார்க்கத்துடன் நபி ﷺ அவர்கள் இவர்களிடம் வந்தபோது இவர்கள் நடந்து கொண்டதைக் குறிப்பிடலாம். அப்போது இவர்கள் நபியவர்களைப் பின்பற்றுவதற்குப் பதிலாக சூனியத்தைப் போதிக்கின்ற வேதங்களைப் பின்பற்றினார்கள். ஆனால் அது ஃபிர்அவ்னுடைய மார்க்கமாக இருந்தது. (மூஸாவின் வேதத்தையும் பின்பற்றவில்லை.)

நாங்கள் எழுதமாட்டோம்' என்று கூறினார்கள். நபியவர்கள் குறுக்கிட்டு, 'அல்லாஹ்வே உனது பெயரால்' என்று எழுதும்படிக் கூறிவிட்டார்கள். (புகாரீ 2731,2732)

மூடவழக்கம் – 40

தத்துவம் பேசி நாத்திகம் பேசினார்கள்

التَّعْطِيْلُ كَقَوْلِ آلِ فِرْعَوْنَ

ஃபிர்அவ்னின் கூட்டத்தார் சொல்லில் இருந்தது போன்று இவர்கள் தஅதீல் செய்பவர்களாக இருந்தார்கள். அதாவது, அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளைப் புறக்கணித்து வெறுமையாக்கினார்கள். அவன் இருப்பையே மறுத்தார்கள்.[1]

பின்குறிப்பு

1. அல்லாஹ் கூறுகின்றான்:

وَقَالَ فِرْعَوْنُ يَاأَيُّهَا الْمَلَأُ مَا عَلِمْتُ لَكُمْ مِنْ إِلَهٍ غَيْرِي فَأَوْقِدْ لِي يَاهَامَانُ عَلَى الطِّينِ فَاجْعَلْ لِي صَرْحًا لَعَلِّي أَطَّلِعُ إِلَى إِلَهِ مُوسَى وَإِنِّي لَأَظُنُّهُ مِنَ الْكَاذِبِينَ

அதற்கு ஃபிர்அவ்ன் (தன் மக்களில் உள்ள தலைவர்களை நோக்கி), 'தலைவர்களே! என்னைத் தவிர வேறோர் இறைவன் உங்களுக்கு இருப்பதாக நான் அறியவில்லை. ஹாமானே! களிமண்(ணால் செய்த செங்கல்) சூளைக்கு நெருப்பு வை. (அந்தச் செங்கற்களைக்கொண்டு வானளாவிய) மாளிகை ஒன்றை எனக்காக நீ கட்டு. (அதில் ஏறி) மூசாவுடைய இறைவனை நான் பார்க்க வேண்டும். (அவர் தமக்கு வேறு இறைவன் இருப்பதாகக் கூறுகிறாரே!) இவ்விசயத்தில் நிச்சயமாக அவர் பொய் சொல்வதாகவே நான் எண்ணுகிறேன்' என்று கூறினான். (குர்ஆன் 28:38)

அதாவது, அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்பதையே இந்த வார்த்தைகளில் ஃபிர்அவ்ன் மறுத்ததின் மூலம் அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் அனைத்தையுமே அவன் மறுத்து விட்டான். அவனுடைய இந்தப் பேச்சை நம்பிக்கை கொண்ட அவனது கூட்டமும் அல்லாஹ்வை மறுத்துவிட்டிருந்தார்கள்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: